1989 மார்ச் 29]

திரு. வி. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நூல் தட்டுப்பாடு காரணமாக நெசவாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை விலையில், குடும்பக் கார்டு மூலமாக நூல் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவரவர்களே, இதற்குத் தனி வினா எழுப்பினால் விரிவான விடை தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

நாடாளுமன்றத்தில் தக்கர் கமிஷன் அறிக்கை வெளியிடப் பெற்றுள்ளது குறித்து.

THIRU M. ABDUL LATHEEF : Mr. Speaker, on a point of order, I crave the indulgence of the Hon. Speaker to raise a matter of public importance, not only public importance, but it is a matter of urgent national importance. I mean, other things being equal, I seriously doubt whether I could raise this at all because of the question of jurisdiction. What I submit is, that the nation is seized of the very serious matter in connection with the publication of the Thakkar Commission Report. . . . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விடை சொல்லும் வரையில் பொறுமையாக இருக்கலாம் அல்லவா ?

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, மிகமுக்கியமான பகுதி, தக்கர் கமிஷன் ரிப்போர்ட்டிலே. . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அனைவரும் உட்காரலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். ஒரு நாளைக்கு ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது மரபு, இப்போது நான் அறிவிக்கப் போகிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் தொடர்ந்து உரையாற்றலாம். (குறுக்கீடு) எந்த வகையான முன்னறிவிப்பும் கொடுக்காமல் எழுப்பக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற நிகழ்ச்சி குறித்து நாடாளுமன்றத்திலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் பிரச்சினை எழுப்பியபோது நாடாளுமன்றத்தினுடைய தலைவர் அதை அனுமதிக்கவில்லை. அதே முறையைத் தாங்களும் இங்கே பின்பற்றுவது நாடாளுமன்ற-சட்டமன்ற உறவை நிலைப்படுத்துவதற்கு உதவுமென்று கருதுகிறேன்.

4, ஒத்திவைப்புத் தீர்மானம்— எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்கு தொடர்ந்துள்ளது மற்றும் எதிர்க்கட்சித் தொண்டர்கள் கைது செய்யப் பெற்றுள்ளது தொடர்பான பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து திரு. லத்தீப் அவர்கள் உட்கார வேண்டும். இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம். சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும், இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு அதையொட்டித் தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து சட்டமன்றப் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, அவையில் விவாதிக்க அனுமதி கோரி, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு.எஸ்.ஆர். இராதா, திரு. ஆர்.அண்ணா நம்பி, திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு எஸ். டி. உகம்சந்த். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மற்ற சட்டமன்றங்களிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இதுபற்றி எழுத்து மூலமாகக் கொடுத்தால் கவனித்து விடை சொல்லப்படும். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு தவறானது என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவது மரபுகளுக்கு, சட்டத்திற்கு மாறானது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது திரு. குமரி அனந்தன் அவர்கள், சபாநாயகர் தீர்ப்பு தவறானது என்று உறுப்பினர் சொல்லக்கூடாது என்று கூறியதைக் கோடிட்டு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS